**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.538/2018**

**Prosecution Witness : 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | சூரியதிலகராணி | **Caste** | : | |
| **Father's Name** | : | பிச்சை | **Calling** | : | காவல் ஆய்வாளர் |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | குமுளி | **Age** | : | **45/2026** |
| | | | **Dated** | : | **18.02.2026** |

**18.02.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–4 திருமதி. சூரியதிலகராணி ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 4** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர்.**
<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது தேனி மாவட்டம் குமுளி காவல் நியைத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 22.06.2017ம் தேதி தாடிக்கொம்பு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில்இருந்தபோது எனக்கு கிடைத்த ரகசிய தகவல்களின் அடிப்படையில் அன்றைய தினம் காலை 05.30 மணிக்கு நானும் சிறப்பு சார்பு ஆய்வாளர்கள் செல்வராஜ், சுப்பிரமணி, தலைமைக்காவலர் அரியவேல் ஆகியோருடன் தாடிக்கொம்பு காவல் சரகம் குளத்துார் அருகே உள்ள சந்தானவர்த்தினி ஆற்றுப்படிகையில் உள்ள சுடுகாடு அருகே ரோந்துசெல்லும்போது சுடுகாடு அருகே தார் ரோட்டின் அருகே வந்த TN 57 L1372 TATA 407 டிப்பர் லாரியை மறித்து வாகன சோதனை

மேற்கொண்டபோது லாரியை ஓட்டிவந்த நபர் குளத்துரைச்சேர்ந்த முனியாண்டி மகன் முத்துப்பாண்டி என கூறினார். அவர் சந்தனவர்த்தினி ஆற்றின் ஒரு யூனிட் மணலை திருட்டுத்தனமாக எடுத்ததை ஒப்புக்கொண்டார். வாகனத்தில் பார்த்தபோது ஆற்றுமணல் இருந்தது. மேற்படி இடத்தில் பொதுமக்கள் சாட்சியாக முன்வராததால் எதிரியை காரணம் கூறி கைது செய்து லாரியை மணலுடன் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.சுப்பிரமணி தலைமைக்காவலர் அரியவேல் ஆகியோர் முன்னிலையில் அத்தாட்சி தயார்செய்து கைப்பற்றினேன். எதிரி மற்றும் வழக்குச்சொத்துகளுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண். 162/2017 சட்டப்பிரிவுகள் 379 இதச மற்றும் 4, 21(5) MMD ACT உடன் இணைந்த 36(A) MMD & RR ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். எதிரியை பாராவசம் ஒப்புவித்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். சாட்சிகள் சிறப்பு சார்பு ஆய்வாளர்கள் சுப்பிரமணி , செல்வராஜ், தலைமைக்காவலர் அரியவேல் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். லாரியில் இருந்த மணலை திண்டுக்கல் பாசனப்பிரிவு உதவிப்பொறியாளர் பொதுப்பணி துறை அவர்களிடம் ஒப்படைத்து சான்று பெற்றேன். பின்பு வழக்குச்சொத்தான லாரியை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து RPR 154/17 ஆக பதிவுசெய்தேன். பணிமாறுதல் காரணமாக வழக்குக்கோப்பை ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் படிவம் -91 அ.சா.ஆ.4 ஆகவும் பொதுப்பணித்துறை உதவி பொறியாளர் அறிவிப்பு அ.சா.ஆ. 5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்கின் கண்உற்ற சாட்சியும் சம்பவ சாட்சியும் நீங்கள் தான் என்றால் சரிதான். வழக்கின் சாட்சிகள் அனைவரும் தங்கள் காவல்நிலையத்தில் பணியாற்றும் காவல் துறையைச்சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். TN 57 L1372 TATA 407 டிப்பர் லாரின் உரிமையாளர் யார் என்று விசாரித்து அவரை வழக்கின் சாட்சியாகவோ அல்லது எதிரியாகவோ இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் கைப்பற்றியதாக சொல்லப்படும் லாரி மற்றும் மணல் கரூர் – திண்டுக்கல் சாலைக்கு அருகில் உள்ளது என்றால் சரியல்ல. பார்வை மகஜர் , மாதிரி வரைபடம் வழக்கில் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். லாரியில் உள்ள மணல் ஒரு யூனிட் தான் என்று முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சரியான அளவு குறித்து தங்களுக்கு குறித்து கூற இயலாது என்றால் எதிரி சொன்னதன் அடிப்படையில் தீர்மானித்தோம். நான் சொல்வது போல் எவ்வித சம்பவம் நடைபெறவில்லை என்றாலும்

சொன்ன இடம் சொன்ன நேரத்தில் எதிரியை கைதுசெய்யவில்லை என்றாலும் அவரிடமிருந்து எவ்வித வழக்குச்சொத்தும் அத்தாட்சி மூலம் கைப்பற்றபடவில்லை என்றாலும் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. உயர்அதிகாரி உத்தரவின் கீழ் புள்ளியியல் கணக்கிற்காக எதிரி மீது தவறாக வழக்குபதிவுசெய்துள்ளேன் என்றால் சரியல்ல. பொதுப்பணி துறையில் ஒப்படைக்கப்பட்ட மணலுக்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C Digitally signed by DINESH KUMAR C Date: 2026.02.18 10:32:15 +0530

Judicial Magistrate No.II
Dindigul.